தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066


dinakani2023@gmail.com

RNI-TNTAM/2023/88253

நமது
# தினகனி
NAMADHU DHINA KANI
www.dhinakani.com
காலை நாளிதழ்

KANI GYM
CALL:9894808044

| Vol: 02 | Issue: 238 | 4 Pages | 26.3.2025 | Wednesday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 238 | 4 பக்கங்கள் | 26.3.2025 | புதன்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |




**பற்றி விடாஅ இடும்பைகள் பற்றினைப்**

**பற்றி விடாஅ தவர்க்கு**

**விளக்கம்:**
யான் எனது என்னும் இருவகைப் பற்றுக்களையும் பற்றிக் கொண்டுவிடாத வரை, துன்பங்களும் விடாமல் பற்றிக்கொள்கின்றன.

## அடுக்குமாடி குடியிருப்பில் பயங்கர தீ விபத்து; காவலாளி பலி



மும்பை, மார்ச்.26

மராட்டியமாநிலம்மும்பையின்வித்யாவிகார்பகுதியில்அடுக்குமாடி குடியிருப்பு உள்ளது. 13 மாடிகளை கொண்ட இந்த குடியிருப்பில் நேற்று அதிகாலை பயங்கர தீ விபத்து ஏற்பட்டது.

இதனால், குடியிருப்பில் இருந்த அனைவரும் அலறியடித்து வெளியேஓடினர்.தகவலறிந்துவிரைந்துவந்ததீயணைப்புத்துறையினர் பற்றி எரிந்த தீயை அணைக்க முயன்றனர்.

மேலும், குடியிருப்புக்குள் சிக்கி இருந்த 20 பேரை பத்திரமாக மீட்டனர். தீ விபத்தில் 3 பேர் காயமடைந்தனர். அவரை மீட்டு மருத்துவமனையில் அனுமத்தனர். பின்னர், சில மணிநேர போராட்டத்திற்குப்பின் பற்றி எரிந்த தீயை அணைத்தனர்.

ஆனாலும், இந்த தீ விபத்தில் அடுக்குமாடி குடியிருப்பில் வேலை செய்துவந்த காவலாளி உதய் கங்கன் (வயது 45) உயிரிழந்தார். அவரின் உடல்மீட்கப்பட்டுபிரேதபரிசோதனைக்குஅனுப்பிவைக்கப்பட்டது. இந்த தீ விபத்து குறித்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

## டெல்லி ஐகோர்ட்டு நீதிபதியை அலகாபாத்திற்கு பணியிடமாற்றம் செய்ய எதிர்ப்பு; வழக்கறிஞர்கள் போரட்டம்



லக்னோ, மார்ச்.26

டெல்லி ஐகோர்ட்டு நீதிபதியாக செயல்பட்டு வந்தவர் ய்ஷ்வந்த் வர்மா. இவர் டெல்லியில் உள்ள வீட்டில் குடும்பத்துடன் வசித்து வந்தார்.

இதனிடையே, கடந்த 14ம் தேதி ஹோலி பண்டிகையின்போது யஷ்வந்த் வர்மாவின் வீட்டில் திடீரெனதீ விபத்து ஏற்பட்டது. தீ விபத்து குறித்து தகவலறிந்த தீயணைப்புத்துறையினர் விரைந்து வந்து தீயை அணைத்தனர்.

அதேவேளை, தீ விபத்தின்போது யஷ்வந்த் வர்மாவின் வீட்டில் இருந்துகட்டுகட்டாகபணம்எரிந்தநிலையில்கண்டுபிடிக்கப்பட்டது. நீதிபதி வீட்டில் உள்ள அறையில் கட்டு கட்டாக கோடிக்கணக்கில் பணம்கண்டுபிடிக்கப்பட்டசம்பவம்பெரும்பரபரப்பைஏற்படுத்தியது.

இந்த விவகாரம் பூதாகாரமான நிலையில் டெல்லி நீதிபதி யஷ்வந்த் வர்மாவை உத்தரபிரதேச மாநிலம் அலகாபாத் ஐகோர்ட்டிற்கு பணியிடமாற்றம் செய்ய சுப்ரீம் கோர்ட்டு பரிந்துரைத்துள்ளது.

இந்நிலையில், யஷ்வந்த் வர்மாவை அலகாபாத் ஐகோர்ட்டிற்கு பணியிடமாற்றம் செய்ய வழக்கறிஞர்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். நீதிபதி யஷ்வந்த் வர்மாவை பணிநீக்கம் செய்ய வேண்டும் என்றும் அவர்அலகாபாத்ஐகோர்ட்டில்பணியாற்ற கூடாது என்றும்அலகாபாத் நீதிமன்ற வழக்கறிஞர்கள் இன்று முதல் காலவரையற்ற போராட்டம் அறிவித்துள்ளனர்.

## கேரளா: பறவை மோதியதால் அவசர அவசரமாக தரையிறங்கிய விமானம்




திருவனந்தபுரம், மார்ச்.26

கேரள மாநிலம் திருவனந்தபுரத்தில் இருந்து இன்று மாலை மணிக்கு கர்நாடகமாநிலம்பெங்களூருவுக்குஇண்டிகோவிமானம்புறப்பட்டது. விமானத்தில் 179 பேர் பயணித்தனர்.

புறப்பட்டசிலநிமிடங்களில்நடுவானில்பறந்துகொண்டிருந்தபோது விமானத்தின் மீது பறவை மோதியது.

இதையடுத்து, பாதுகாப்பு காரணங்களுக்காக விமானம் உடனடியாக திருவனந்தபுரம் விமான நிலையத்தில் தரையிறக்கப்பட்டது. பின்னர், மாற்று விமானம் மூலம் பயணிகள் பெங்களூருவுக்கு புறப்பட்டனர்.

# விழுப்புரம்: தலையில் கல் விழுந்து உயிரிழந்த சிறுமியின் குடும்பத்திற்கு முதல்வர் ஸ்டாலின் நிதியுதவி வழங்கினார்

சென்னை, மார்ச்.26

முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டி வட்டம், திருக்குணம் மதுரா கொசப்பாளையம் கிராமத்தில் (23ந்தேதி) நடந்த வாய்க்கால் பராமரிப்புப் பணியின்போது, வாய்க்கால்நடுவில்இருந்தபாறையை அகற்றும் பொருட்டு வெடிவைத்து தகர்த்துள்ளனர். அப்போது, சிதறிய கருங்கல்எதிர்பாராதவிதமாகஅருகில் இருந்த விவசாய நிலத்தில் ஆடு மேய்த்துக் கொண்டிருந்த முத்துலட்சுமி என்பவரின் மகள் காயத்திரியின் (வயது 10) தலையில் விழுந்துள்ளது.

இதில், பலத்த காயமடைந்து சிறுமி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற துயரகரமான செய்தியை கேட்டு மிகவும் அதிர்ச்சியும், வேதனையும் அடைந்தேன்.

இந்த சம்பவத்தில் உயிரிழந்த சிறுமி




காயத்திரியின் பெற்றோருக்கும், அவரது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், உயிரிழந்த சிறுமியின் குடும்பத்தினருக்குரூ.3லட்சம் முதல்அமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு அதில் கூறப்பட்டு உள்ளது.

## முதல் பெண் வழக்கறிஞராக இஃப்தார் நிகழ்ச்சியை நடத்திய திருமதி. பெரோக்ஷா அன்சாரி




சென்னை, எழும்பூர், முதல் பெண் வழக்கறிஞராக திருமதி. பெரோக்ஷா அன்சாரி அவர்கள் சிறப்பாக ஏற்பாடு செய்த இஃப்தார் நிகழ்ச்சி சென்னை எழும்பூரில் நேர்த்தியாக நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் தலைமை விருந்தினராக திரு. பிரபாகர் (துணை தலைவர், இந்திய வழக்குரைஞர் கழகம்) திரு. கார்த்திகேயன் (துணை தலைவர், தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி பார் கவுன்சில்) திரு. மோகன கிருஷ்ணன் (தலைவர், சென்னை உயர் நீதிமன்ற சங்கம்) திருமதி. பிரிசில்லா பாண்டியன் திரு. வேல்முருகன் (தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி பார் கவுன்சில் உறுப்பினர்) திருமதி. ராஜேக்ஷ்வரி பிரியா (அனைத்து மக்கள் அரசியல் கட்சி) திரு. விஜய பாஸ்கர் திரு. அடங்கா அன்பு (இந்திய தேசிய காங்கிரஸ்) ஆகியோர்கலந்து கொண்டு திருமதி. பெரோக்ஷாஅன்சாரி அவர்களின் சமூகப்பணி மற்றும் இஃப்தார் நிகழ்ச்சி ஏற்பாட்டைப் பாராட்டி மகிழ்ந்தனர். இந்த நிகழ்வு சமுதாய ஒற்றுமையை வலுப்படுத்தும் முக்கிய நிகழ்வாக அமைந்தது.

## கொடிக்கம்பத்தை அகற்றியபோது மின்சாரம் பாய்ந்து திமுக நிர்வாகி பலி



ஊத்தங்கரை, மார்ச்.26

கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை அடுத்த மூன்றம்பட்டி ஊராட்சிக்குட்பட்ட கேத்துநாயக்கன்பட்டியைச் சேர்ந்தவர் ராமமூர்த்தி (53). கேத்துநாயக்கன்பட்டி திமுக கிளை செயலாளர். அப்பகுதியில் பொது இடத்தில் உள்ள திமுக கொடிக் கம்பத்தை அகற்றும் பணியில் நேற்று காலை திமுகவினர் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர் அப்போது எதிர்பாராதவிதமாக ராமமூர்த்தி உள்ளிட்ட 5 பேர் மீது மின்சாரம் பாய்ந்தது. இதில் படுகாயமடைந்த அனைவரையும் அங்கிருந்தவர்கள் மீட்டு ஊத்தங்கரை அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். அங்கு தீவிர சிகிச்சை அளித்தும் பலனின்றி ராமமூர்த்தி உயிரிழந்தார். படுகாயமடைந்த கேத்துநாயக்கன்பட்டியை சேர்ந்த ஆறுமுகம் (58), பெருமாள் (49), முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் பூபாலன் (50), சர்க்கரை (60) ஆகிய 4 பேருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இதுபற்றி சிங்காரப்பேட்டை போலீசார் வழக்கு பதிந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## தரிசு நிலத்தில் பற்றி எரிந்த காட்டுத்தீ: வேடசந்தூர் அருகே பரபரப்பு

வேடசந்தூர், மார்ச்.26

வேடசந்தூர் அருகே தனியார் நிலங்களில் பற்றி எரிந்த காட்டுத் தீயை தீயணைப்பு வீரர்கள் போராடி அணைத்தனர். திண்டுக்கல் மாவட்டம் வேடசந்தூர்அருகே சேனன்கோட்டை பகுதியில் சுமார் 2 ஏக்கர் பரப்பளவில் தரிசு நிலம் உள்ளது. தனியாருக்கு சொந்தமான இந்த நிலத்தில் புற்கள், செடி, கொடிகள் ஏராளமாக வளர்ந்து இருந்தன. தற்போது கடும் வெயில் வாட்டி வதைக்கிறது. இதனால் அவை அனைத்தும் காய்ந்து கருகின. இந்நிலையில், நேற்று மதியம் எதிர்பாராத விதமாக அப்பகுதியில் திடீரென தீப்பிடித்தது.

சிறிது நேரத்தில் தீ மளமளவென பரவி பற்றி எரிந்தது.

இதுகுறித்து தகவலறிந்த வேடசந்தூர் தீயணைப்பு வீரர்கள் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்தனர். சுமார் அரைமணி நேர போராட்டத்திற்கு பிறகு தீயை அணைத்து கட்டுக்குள் கொண்டு வந்தனர். இருப்பினும் 2 ஏக்கரில் இருந்த காய்ந்த புற்கள் கருகி சாம்பலாகின. சிகரெட், பீடி குடிப்பவர்கள் அதை அணைக்காமல் தூக்கி வீசுவதால் இதுமாதிரியான தீவிபத்து ஏற்படுவதாக தீயணைப்பு வீரர்கள் தெரிவித்தனர்.

## சென்னை அம்பத்தூர் மக்கள் முதல்வரின் மனிதநேய விழா

சென்னை அம்பத்தூர் மக்கள் முதல்வரின் மனித நேய விழா 2025! முதல்வர் கொள்கை குன்றம், உயர்வார் அவரால் என்றும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் 72வது பிறந்தநாளை முன்னிட்டு திமுக சென்னை கிழக்கு மாவட்டம், அம்பத்தூர் வடக்கு பகுதி, ஜோசப்சாமுவேல் சட்டமன்ற உறுப்பினர் தலைமையில் அம்பத்தூர் ஓ.டி பேருந்து நிலையம் அருகில் நடைபெற்ற மாபெரும் புகழரங்கத்தில் சேகர்பாபு இந்து சமய அறநிலை துறை அமைச்சர் மாவட்டச் செயலாளர்,



எ.வ.வேலு பொதுப்பணித் துறை அமைச்சர்,சபாபதி மோகன் கழக கொள்கைப் பரப்பு செயலாளர் மேனாள் துணை வேந்தர்,காசி முத்து மாணிக்கம் கழக வர்த்தகர் அணி செயலாளர் மற்றும் சென்னை மாநகர மேயர் பிரியா ராஜன், சன் முனியாண்டி, மண்டல குழு தலைவர் மூர்த்தி, மாமன்ற உறுப்பினர்கள் ராஜகோபால், நாகராஜ், எம்.இ. சேகர் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டு புகழுரையாற்றினர். அனைவருக்கும் வட்டச் செயலாளர் மு. ரகு நன்றி கூறினார்.

## உலக நீர் தினத்தை பள்ளி மாணவர்களுடன் கொண்டாடிய ஜே.எம்.ஜே மீடியா

ஜே.எம்.ஜே மீடியாவின் அணுசரணையுடன், உலக நீர் தினத்தினை முன்னிட்டு நீரின் அவசியம், நீரின் சேமிப்பு, மற்றும் நீரின் பாதுகாப்பு தொடர்பாக மேலாண்மை ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி, வள்ளிப்பட்டு, ஆலங்காய ஒன்றியம், வாணியம்பாடி, திருப்பத்தூர் மாவட்டம் மாணவர்களுக்கு எடுத்துரைக்கப்பட்டது. உலகின் மிக முக்கியமான தினங்களை,உலகம்முழுவதும் உள்ள நமது ஒருங்கிணைப்பாளர்களின் உதவியுடனும், பங்கேற்புடனும், ஜே.எம்.ஜே மீடியா நிறுவனம் கொண்டாடி வருகிறது. அந்த வகையில், கடந்த மார்ச் 22ஆம் தேதி சர்வதேச நீர் தினம் என்பதால், உலகத்திற்கு அருட்கொடையாக வழங்கப்பட்டுள்ள நீரின்




முக்கியத்துவம், அதை பாதுகாத்து எதிர்கால உலகிற்கு எவ்வாறு வழங்குவது என்பதைக் குறிக்கும் விழிப்புணர்வு நிகழ்வு, ஜே.எம்.ஜே மீடியாவின் நிறுவன பணிப்பாளர் ஜஸூரா ஜலீலின் தலைமையில் நடைப்பெற்றது. இந்நிகழ்வில் மேலாண்மை ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி, வள்ளிப்பட்டு, ஆலங்காய ஒன்றியம், வாணியம்பாடி, திருப்பத்தூர் மாவட்டம் மாணவர்கள் பெருந்திரளாக பங்கேற்றனர். மேலும், அப்பள்ளியின் தலைமை ஆசிரியர் திரு. சிவஞானம் (M.A., B.Ed.) "நீர் சேமிப்பு" பற்றியும், உதவி ஆசிரியர் பெருமக்கள் திருமதி கு. கோமகள், மு. சரஸ்வதி, மற்றும் ஆசிரியர்கள் திரு. வெ. ரமேஷ், திரு. ரா. அண்ணாமலை, திருமதி மா. அருள்மொழி ஆகியோர் நீர் நிலைகளை பாதுகாப்பது, நீரின் அசுத்தம், நீரினை சேமித்தல் ஆகியவற்றைப் பற்றியும் மாணவர்களுக்கு விளக்கிக் கூறியது குறிப்பிடத்தக்கது.



தமிழ்நாடு முதலமைச்சர் தலைவர் மு க ஸ்டாலின் ஆணைக்கிணங்க, துணை முதலமைச்சர்,கழக இளைஞரணி செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வழிகாட்டுதலின்படி, தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலையத்துறை, கொண்டத்துக்காளியம்மன் திருக்கோயில் பெருமாநல்லூரில்,இத்திருக்கோயிலில் ரூ.20 கோடி மதிப்பீட்டில் திருப்பணி வேலை தொடங்கப்பட்டுள்ளது. இன்று முதல் கட்டமாக ரூ.44 லட்சம் மதிப்பீட்டில் நவீனகழிப்பறை மற்றும் குளியலறை கட்டிடங்கள் திறக்கப்பட்டு பக்தர்கள் பயன்பாட்டிற்கு துவக்கி வைத்தோம். நிகழ்வில், வடக்கு மாநகர பொறுப்பாளர் ஈ தங்கராஜ், திருப்பூர் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் விஸ்வநாதன், மாநிலப் பிரச்சார குழு உறுப்பினர் உமாமகேஸ்வரி கழக நிர்வாகிகள் மற்றும் அனைவரும் கலந்து கொண்டார்கள்.

# தென்காசி மாவட்ட காவல்துறை மற்றும் பசுமை தமிழ்நாடு இயக்கம் சார்பில் மரம் நடும் விழா



தென்காசி மாவட்ட காவல்துறை மற்றும் பசுமை தமிழ்நாடு இயக்கம் சார்பாக இயற்கை வளங்களை பாதுகாக்கும் விதமாகவும், மரம் நடுவதை ஊக்குவிக்கும் விதமாகவும் இன்று மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.அரவிந்த் அவர்களின் தலைமையில் மாவட்ட காவல் அலுவலகத்தில் பணிபுரியும் காவல் துறையினர் மற்றும் அமைச்சு பணியாளர்கள் சுமார் 70 மரக்கன்றுகளை நட்டு வைத்தனர். இதேபோல் மாவட்டத்திலுள்ள அனைத்து காவல் நிலையங்களுக்கும் 1700 க்கும் மேற்பட்ட மரக்கன்றுகளை பகிர்ந்து வழங்கி அனைத்து காவல்a நிலையங்களிலும் மரம் நட்டு பராமரிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. இந்நிகழ்ச்சியில் கூடுதல் காவல் கண்காணிப்பாளர்கள், துணை காவல் கண்காணிப்பாளர்கள், காவல் ஆய்வாளர்கள், சார்பு ஆய்வாளர்கள், காவல் ஆளினர்கள் மற்றும் அமைச்சு பணியாளர்கள் கலந்து கொண்டனர்..

# காரைக்குடி டாக்டர் உமையாள் இராமநாதன் மகளிர் கல்லூரியில் சாலைப் பாதுகாப்பு விழிப்புணர்வு முகாம்



டாக்டர்உமையாள்இராமநாதன் மகளிர் கல்லூரி நாட்டு நலப்பணித் திட்டம் மற்றும் சிவகங்கை மாவட்ட சாலைப் பாதுகாப்புப் படை இணைந்து சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு நிகழ்வு கல்லூரியின் நுழைவாயிலில் நடைபெற்றது. கல்லூரியின் முதல்வர் முனைவர் ஹேமமாலினி கணேசன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. சிறப்பு விருந்தினர்களாக காரைக்குடி காவல் துணைக் கண்காணிப்பாளர் T. பார்த்திபன் அவர்கள், காரைக்குடி போக்குவரத்து காவல் நிலைய காவல் ஆய்வாளர் P.S.பாஸ்கர் அவர்கள், சிவகங்கை மாவட்ட சாலைப் பாதுகாப்புப் படை ஒருங்கிணைப்பாளர் முனைவர் ஜெ.பிரகாஷ்மணிமாறன் அவர்கள், காரைக்குடி போக்குவரத்து காவல் நிலைய சார்பு ஆய்வாளர் மாடசாமி அவர்கள், அழகப்பாபுரம் காவல் நிலைய சிறப்பு ஆய்வாளர் சரவணகுமார் அவர்கள் கலந்து கொண்டனர் .பொது மக்களிடையே போக்குவரத்து விழிப்புணர்வு சின்னங்களை காண்பித்து வினா எழுப்பி பரிசுகள் வழங்கப்பட்டது.

100 க்கும் மேற்பட்ட கல்லூரி மாணவிகள் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

கல்லூரி நாட்டு நலப்பணித்திட்ட அலுவலர்கள் முனைவர் மா.ஜோதிமுத்து மற்றும் திருமதி சிலம்புச்செல்வி மற்றும் முனைவர் இரா. பிரபாவதி இந்நிகழ்வை ஒருங்கிணைத்தனர்.

# திருப்பூர் மாவட்ட நகர மன்ற தலைவர் பாபு கண்ணன் தலைமையில் தாராபுரம் நகராட்சி கூட்டம்



திருப்பூர் மாவட்டம் தாராபுரம் நகராட்சி கூட்டம் நகர மன்ற தலைவர் பாபு கண்ணன் தலைமையில் நடைபெற்றது தாராபுரம், மார்ச். 24 தாராபுரத்தில் மாதாந்திர கூட்டம் நகராட்சி மன்ற கூட்ட அரங்கில் நடைபெற்றது.கூட்டத்திற்கு நகரமன்ற தலைவர் பாப்பு கண்ணன் தலைமை தாங்கினார். நகராட்சி ஆணையாளர் திருமால் செல்வம் முன்னிலை வகித்தார். கூட்டத்தில் குடிநீர் பணிகளுக்கு போர்க்கால அடிப்படையில் ஆழ்குழாய் கிணறு அமைத்தல், புதிய மோட்டார் பொறுத்துதல், மோட்டார் பழுதுபார்த்தல் உட்பட பல்வேறு பணிகளுக்காக ரூபாய் 1 கோடி மதிப்பிலான திட்டப் பணிகளுக்கு அனுமதி வழங்குதல், கூடுதலாக அளவீடு செய்து சொத்து வரி விதிக்கப்பட்ட நகராட்சிக்கு உட்பட்ட வீடுகளுக்கு சரியான அளவு செய்து சொத்துவரிவிதிக்க அனுமதி கோருதல், சாக்கடை கால்வாய்களை தூர்வார மினி ஜேசிபி இயந்திரங்களுக்கு அனுமதி கோருதல் உட்பட 84 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இதில் அனைத்துநகரமன்ற உறுப்பினர்களும், அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

# கடையநல்லூர் காவல் ஆய்வாளர் உள்ளிட்டோரின் முயற்சியால் புனரமைக்கப்பட்ட குழந்தைகள் அங்கன்வாடி மைய கட்டடம் திறப்பு விழா



தென்காசி மாவட்டம் கடையநல்லூர் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி தெற்கு தெருவில் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டத்தின் கீழ் அங்கன்வாடி மையம் பல மாதங்களாக பராமரிக்கப்படாமல் இருந்து வந்தது. இந்த மையத்தில் சுமார் 16 க்கும் மேற்பட்ட குழந்தைகள் கல்வி பயின்று வருகின்றனர். இந்த அங்கன்வாடி கட்டிடம் அருகில் தினசரி காய்கறி சந்தையும் செயல் பட்டு வரும் நிலையில் இந்த அங்கன்வாடி மையத்தை சுற்றிலும் காய்கறி கடைகள், பழக்கடைகள் ஆக்கிரமித்து செயல் பட்டு வந்தது. இதனால் அப்பகுதி பொது மக்களுக்கும், குழந்தைகளுக்கும் கடும் சிரமம் ஏற்பட்டு வந்தது. இந்நிலையில் கடையநல்லூரில் சில மாதங்களுக்கு முன்பு புதிதாக பொறுப்பேற்றுள்ள இன்ஸ்பெக்டர் ஆடிவேல் தலைமையிலான காவலர்கள் மற்றும் நகர்மன்ற தலைவர் மூப்பன் ஹபீபுர் ரஹ்மான், ஆணையாளர் ரவிச்சந்திரன் ஆகியோரின் தீவிர முயற்சியால் குழந்தைகள் அங்கன்வாடி கட்டிடத்தை சுற்றிலும் ஆக்கிரமித்து வைக்கப்பட்டிருந்த கடைகள் அனைத்தும் பொதுமக்கள் எந்த விதமான சிரமமுமின்றி எளிதாக சென்று வரும் அளவிற்கு ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டது. அதனை தொடர்ந்து பராமரிப்பு இல்லாமல் இருந்த அங்கன்வாடி கட்டிடத்தை இன்ஸ்பெக்டர் ஆடிவேல் தலைமையில் தலைமை காவலர் முத்துராஜ், சங்கர், கனிராஜ் தீவிர முயற்சியாலும், அப்பகுதி நன்கொடையாளர்கள் மூலமாகவும் இந்த அங்கன்வாடி கட்டிடம் சீரமைக்கப்பட்டது அந்த சுவர்களில் மத ஒற்றுமையை வலியுறுத்தும். வகையிலான ஓவியங்கள், திருக்குறள், அப்துல்கலாம் திருவருப்படம், தேசிய கொடி படங்கள் ஆகியவை வரையப்பட்டிருந்தது பொது மக்கள் மத்தியில்பெரும்வரவேற்பை பெற்றுள்ளது. அதன் திறப்பு விழா நடைபெற்றது விழாவிற்கு கடையநல்லூர் இன்ஸ்பெக்டர் ஆடிவேல் தலைமை தாங்கினார் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தென்காசி மாவட்டதுணைத்தலைவரும் நகர்மன்ற உறுப்பினருமான அக்பர் அலி. எம் சி, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் 17வது வார்டு நகர் மன்ற உறுப்பினர் நிலோபர் அப்பாஸ் எம் சி நன்கொடையாளர்கள் ஏ .ஐ .கே. கோல்டு வழக்கறிஞர் முஹம்மது ஜாவித், இத்தாலியன்பீரப்பா மற்றும் சமூக ஆர்வலர் குறிச்சிசகிலாபானு ஆகியோர் முன்னிலை வகித்தனர் . குழந்தைகள் வளர்ச்சித் திட்ட அலுவலர் பர்ஹத் சுல்தானா அனைவரையும் வரவேற்றார்

நகர்மன்ற தலைவர் ஹபீபுர்ரஹ்மான், கடையநல்லூர் காவல் ஆய்வாளர் ஆடிவேல் ஆகியோர் புனரமைக்கப்பட்ட கட்டிடத்தை திறந்து வைத்தனர்.

முன்னதாக பொதுமக்கள் அங்கன்வாடி மற்றும் குழந்தைகளுக்கு தேவையான , மின் விளக்கு சேர் பல வகைகள் ஸ்கூல் பேக் தமிழ் ஆங்கில எழுத்துக்கள் உட்பட முன்னதாக குழந்தைகளுக்கு தேவையான சேர், தட்டு, புத்தகம், பந்து, கல்வி மற்றும் விளையாட்டு உபகரணங்களை சீர்வரிசையாக கொண்டு வந்தனர் நிகழ்ச்சியில் புளியங்குடி அப்துல் கலாம் பொதுநல சேவை அமைப்பு தலைவர் சின்னராஜ் , உமர் கத்தாப் , சப். இன்ஸ்பெக்டர்கள் அலெக்ஸ்மேனன், நரசிங்கம், ரவி, சாமுவேல், எஸ்.எஸ்.ஐ.மாரியப்பன், தனிப்பிரிவு அப்துல் கனி, செந்தில், நிலைய எழுத்தர் தங்கத்துரை, தலைமை காவலர்கள் ராஜேந்திரன், கருப்பசாமி, செந்தில்குமார், கடையநல்லூர் தினசரி மார்க்கெட் வியாபாரிகள் சங்க தலைவர் அலங்காரம், செயலாளர் மாரியப்பன், பொருளாளர் சீதாராமன், மணிச்சுடர் நாளிதழ் மாவட்ட புகைப்படக் கலைஞர் குறிச்சி சுலைமான் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்

# மனைவி தூக்கு போட்டு தற்கொலை: கத்தியால் கிழித்து கணவன் தற்கொலை முயற்சி



போச்சம்பள்ளி, மார்ச்.25

குடும்பத்தகராறில் இளம்பெண் தூக்கு போட்டு தற்கொலை செய்து கொண்டார். அதை கண்டு அதிர்ச்சி அடைந்த கணவனும் மார்பில் கத்தியால் கிழித்துக் கொண்டு தற்கொலைக்கு முயன்றார். திருப்பத்தூர் மாவட்டம் ஆலங்காயம் பகுதியைச் சேர்ந்தவர் லோகேஷ் (30). இவரது மனைவி ஜனனி (24). இவர்கள், கிருஷ்ணகிரி மாவட்டம்போச்சம்பள்ளி முல்லை நகர் பகுதியில் வாடகை வீட்டில் வசித்து வருகின்றனர். இவர்களுக்கு 8 மாதத்தில் ஆண் குழந்தை உள்ளது. இருவரும் தனியார் நிறுவனத்தில் வேலைக்கு சென்று வருவதால், அவர்களது குழந்தையை ஜனனியின் பெற்றோர் பராமரித்து வருகின்றனர். இந்நிலையில், போதிய வருவாய் இல்லாததால், குடும்பம் நடத்த சிரமப்பட்டுவந்துள்ளனர். இது தொடர்பாக, அவர்களிடையே அடிக்கடி குடும்பத்தகராறு ஏற்பட்டுள்ளது

நேற்று முன் தினம் இருவரும் வீட்டில் இருந்தபோது, தற்போது பார்க்கும் வேலையை விட்டுவிட்டு பெங்களூரு சென்று வேலை பார்த்தால் கூடுதல் வருவாய் கிடைக்கும் என ஜனனி தெரிவித்துள்ளார். அதற்கு லோகேஷ் மறுத்ததால், மீண்டும் தகராறு ஏற்பட்டுள்ளது. ஒருவரையொருவர் கடுமையாக திட்டிக்கொண்டனர். இரவு வரை சண்டை நீடித்துள்ளது. பின்னர், வீட்டிலிருந்து வெளியேறி சென்ற லோகேஷ் போச்சம்பள்ளிக்குசென்று டிபன் சாப்பிட்டுள்ளார். பின்னர், மனைவிக்கும் டிபன் வாங்கிக் கொண்டு வீடு திரும்பினார். அப்போது, கதவு உள்பக்கமாக தாழிடப்பட்டிருந்ததை கண்டு திடுக்கிட்டார். பலமுறை அழைத்தும் திறக்காததால், சந்தேகமடைந்த லோகேஷ், ஜனனியின் பெற்றோருக்கு தகவல் தெரிவித்தார். பின்னர், வெளியே இருந்த வாட்டர் ஹீட்டரை எடுத்து சூடுபடுத்தி, கதவில் ஓட்டை போட்டு தாழ்ப்பாளை திறந்துள்ளார். உள்ளே சென்று பார்த்தபோது, நைலான் கயிற்றில் தூக்கிட்டவாறு ஜனனி சடலமாக தொங்கியுள்ளார்.

இதை கண்டு அதிர்ச்சியடைந்த லோகேஷ், சமையலறைக்கு சென்று அங்கிருந்த கத்தியை எடுத்து தன்னைத்தானே கழுத்து மற்றும் மார்பு பகுதியில் கிழித்துக்கொண்டார். இதில், அதிகளவில் ரத்தம் வெளியேறிய நிலையில் மயங்கி விழுந்தார். சிறிது நேரத்தில் ஜனனியின் தந்தை செல்வம் வீட்டிற்கு வந்துள்ளார். அங்கு மகள் தூக்கில் சடலமாக தொங்குவதையும், மருமகன் ரத்த வெள்ளத்தில் உயிருக்கு போராடிக் கொண்டிருப்பதையும் கண்டு கதறி துடித்தார். சத்தம் கேட்டு அக்கம் பக்கத்தினர் அங்கு விரைந்தனர். தகவலின் பேரில், போச்சம்பள்ளி போலீஸ் இன்ஸ்பெக்டர் நாகலட்சுமி மற்றும் போலீசார் விரைந்து சென்று, தற்கொலைக்கு முயன்ற லோகேஷை மீட்டு போச்சம்பள்ளி அரசு மருத்துவமனையில் அனுமதித்தனர். மேலும், ஜனனியின் சடலத்தை கைப்பற்றி, கிருஷ்ணகிரி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைத்தனர். ஜனனிக்கு திருமணமாகி 2 ஆண்டுகளே ஆவதால், கிருஷ்ணகிரி ஆர்.டி.ஓ. விசாரணை நடத்தி வருகிறார்.

# இணையத்தில் திருமணத்திற்கு வரன் தேடுபவர்கள் ஜாக்கிரதை: சைபர் கிரைம் போலீசார் எச்சரிக்கை

சென்னை, மார்ச்.26

இணையதளத்தில் திருமணத்திற்கு வரன் தேடுபவர்கள் ஜாக்கிரதை என சைபர் கிரைம் போலீசார் எச்சரிக்கை விடுத்துள்ளனர். இது குறித்து சைபர் கிரைம் போலீசார் வெளியிட்ட அறிக்கை: சைபர் குற்றவாளிகள் தற்போது திருமண தளங்களில் போலிக் கணக்குகளை உருவாக்கி, அந்த தளங்களில் திருமண வரன்களைத் தேடும் நபர்களை குறிவைக்கிறார்கள். பின்னர் அவர்களை தொடர்பு கொண்டு, தொடர்ந்து உரையாடல்கள் மூலம் நம்பிக்கையை பெறுகின்றனர். அவர்களுடன் நெருக்கமான பிணைப்பு ஏற்பட்டவுடன், அவர்களை மோசடியில் சிக்கவைக்கின்றனர். சமீபத்தில் திருமண வரன்தேடும் தளங்களைப் பயன்படுத்தி, போலி முதலீட்டு தளங்களில் (www.oxgatens.com, www.oxgatens.net, www.cityindexmain.com, www,cityindexmain.com, www,cityindexlimited.com) பெருந்தொகையை முதலீடு செய்யவைப்பதில் ஒரு புதிய போக்கு காணப்படுகிறது. தேசிய சைபர் கிரைம் புகார் போர்டலில் 2024, 2025ம் ஆண்டுகளில் தமிழ்நாட்டில் திருமண வரன்தேடும் தளங்களின் மூலம் மோசடி தொடர்பான 379 புகார்கள் பதிவாகியுள்ளன எனவே, பொதுமக்கள் ஆன்லைனில் சந்திக்கும் நபர்களின் பின்னணியை சரிபார்க்கவும். அவர்கள் வீடியோ அழைப்புகள் அல்லது நேரடி சந்திப்புகளைத் தவிர்த்தால் எச்சரிக்கையாகஇருங்கள்.ஆன்லைன்மூலம்அறிமுகமானவரின் ஆலோசனையின்அடிப்படையில்ஒருபோதும்பணத்தை முதலீடு செய்யாதீர்கள். குறிப்பாக, குறுகிய காலத்திற்குள் அதிக வருமானம் தருவதாக அவர்கள் உறுதியளித்தால் எச்சரிக்கையாக இருக்கவும். கட்டணமில்லா உதவி எண் அந்நியர்களுடன் வாட்ஸ்அப் அல்லது பிற மெசேஜிங் ஆப்ஸ் மூலம் தனிப்பட்ட அல்லது நிதி தகவல்களைப் பகிர வேண்டாம். நம்பகமான முதலீடுகள் முறையான சேனல்கள் மூலம் மட்டுமே செயல்படுத்தப்படும். இதுபோன்ற மோசடி நடவடிக்கைகளில் நீங்கள் பாதிக்கப்பட்டிருந்தால் அல்லது சந்தேகத்திற்கிடமான செயல்பாடுகளைக் கண்டால், உடனடியாக நடவடிக்கை எடுகவும். சைபர் கிரைம் கட்டணமில்லா உதவி எண் 1930ஐ அழைக்கவும் அல்லது www.cybercrime.gov.inல் புகார் பதிவு செய்யவும் என்று அதில் கூறப்பட்டுள்ளது.

# மசினகுடி அருகே வாழைத்தோட்டம் பகுதியில் காட்டு யானை: வனத்திற்குள் விரட்ட பொதுமக்கள் கோரிக்கை




ஊட்டி, மார்ச்.26

மசினகுடி அருகே வாழைத்தோட்டம் பகுதியில் வலம் வரும் காட்டு யானையை வனப்பகுதிக்குள் விரட்ட வேண்டும் என பொதுமக்கள் வலியுறுத்தியுள்ளனர். நீலகிரி மாவட்டத்தில் அனைத்து பகுதிகளிலும் வன விலங்குகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. குறிப்பாக, யானைகள், சிறுத்தை, கரடி, காட்டுமாடுகள் போன்றவைகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளன. இவைகள் உணவு மற்றும் தண்ணீர் தேடி மக்கள் வாழும் பகுதிகளுக்குள் வருவதால், அடிக்கடி மனிதவிலங்கு மோதல் ஏற்படுகிறது. குறிப்பாக, காட்டு யானைகள் உணவு தேடி மக்கள் வாழும் பகுதிகளுக்குள் வருகின்றன. அப்போது சில சமயங்களில், யானைகளால் தாக்கப்பட்டு கூலித் தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகள் உயிரிழந்து வருகின்றனர்.

இந்நிலையில், ஊட்டி மசினகுடி அருகே உள்ள மாவனல்லா, வாழைத்தோட்டம் ஆகிய பகுதிகளில் யானை ஒன்று வலம் வருகிறது. இவை மக்கள் வாழும் பகுதிகள் மற்றும் சாலைகளில் அடிக்கடி வலம் வருகிறது. அப்போது பொதுமக்கள் மற்றும் வாகன ஓட்டிகளை விரட்டுகிறது. இதனால், அப்பகுதி மக்கள் அச்சத்தில் உள்ளனர். மேலும், இரவு நேரங்களில் மக்கள் நடமாட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, வாழைத்தோட்டம் மற்றும் மாவனல்லா பகுதியில் உலாவரும் காட்டு யானையை வனப்பகுதிக்குள் விரட்ட வனத்துறையினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் வலியுறுத்தியுள்ளனர்.

# ரிஷிவந்தியம் அருகே வனச்சரக அலுவலகத்தில் லஞ்ச ஒழிப்புத்துறை ரெய்டு: ரூ.3.10 லட்சம் பறிமுதல்

ரிஷிவந்தியம், மார்ச்.26

கள்ளக்குறிச்சி மாவட்டம், ரிஷிவந்தியம் அடுத்த பாவந்தூர் கிராமத்தில் தியாகதுருகம் வனச்சரக அலுவலகம் உள்ளது.

இங்கு வனவர் செந்தில் குமார் குத்தகைதாரர்களிடம் லஞ்சம் கேட்பதாக கள்ளக்குறிச்சி மாவட்ட லஞ்ச ஒழிப்புத்துறை துணை காவல் கண்காணிப்பாளர் சத்யராஜுக்கு ரகசிய தகவல் கிடைத்தது. இதையடுத்து மாலை 6 மணியளவில் லஞ்ச ஒழிப்புத்துறை போலீசார் வனச்சரக அலுவலகத்தில்திடீர்சோதனை மேற்கொண்டனர். இந்த சோதனையில் வனவர் செந்தில்குமாரின் அறையில் கணக்கில் வராத ரூ.3 லட்சத்து 10 ஆயிரம் பறிமுதல் செய்யப்பட்டது. இதையடுத்து அவரிடம் விசாரணை மேற்கொண்ட லஞ்ச ஒழிப்புத்துறை போலீசார் அவர் மீது வழக்குப்பதிந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# 2025ம் ஆண்டுக்கான ஆசிரியர் தேர்வு வாரிய உத்தேச ஆண்டு அட்டவணை வெளியீடு

சென்னை, மார்ச்.26

2025ம் ஆண்டுக்கான ஆசிரியர் தேர்வு வாரிய உத்தேச ஆண்டு அட்டவணை வெளியிடப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் நடப்பாண்டில் உத்தேசமாக 7,535 ஆசிரியர்கள் நியமனம் செய்யப்படவுள்ளதாக ஆசிரியர் தேர்வு வாரியம் தெரிவித்துள்ளது

# பிளஸ் 1 தேர்வு எழுதிய மாணவருக்கு திடீர் நெஞ்சுவலி

சிவகிரி, மார்ச்.26

தமிழகத்தில் அரசு, அரசு நிதியுதவி பெறும் மற்றும் தனியார் பள்ளிகளுக்கு பிளஸ் 1, பிளஸ் 2 பொதுத்தேர்வு நடைபெற்று வருகிறது. இந்நிலையில் தென்காசி மாவட்டம் வாசுதேவநல்லூர் கோட்டை தெருவை சேர்ந்த மாரிச்சாமி மகன் கவின்பிரதாப் (17). வாசுதேவநல்லூர் அரசு மேல்நிலைப்பள்ளியில் பிளஸ் 1 படித்து வருகிறார். அவர் நேற்று நடைபெற்ற வணிகவியல் தேர்வை எழுதிக் கொண்டிருந்த போது திடீரென நெஞ்சு வலிப்பதாக கூறினார். இதைத் தொடர்ந்து அவர் வாசுதேவநல்லூர் மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை பெற்ற பிறகு மேல் சிகிச்சைக்காக புளியங்குடி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

# பாஜ பொதுக்கூட்டத்தில் செய்தியாளர் மீது தாக்குதலுக்கு எஸ்.டி.பி.ஐ கண்டனம்

சென்னை, மார்ச்.26

திருச்சியில், செய்தியாளர் மற்றும் புகைப்பட கலைஞர் மீது தாக்குதல் நடத்தப்பட்டது மிகவும் கண்டனத்திற்குரியது என்று எஸ்.டி.பி.ஐ தெரிவித்துள்ளது.



இது குறித்து எஸ்டிபிஐ கட்சியின் மாநில தலைவர் நெல்லை முபாரக் வெளியிட்டுள்ள அறிக்கை: திருச்சியில் நடந்த பாஜ பொதுக் கூட்டத்தில், செய்தியாளர் மற்றும் புகைப்பட கலைஞர் மீது பாஜவினரால் நடத்தப்பட்ட தாக்குதல் மிகவும் கண்டனத்திற்குரியது.

ஊடகவியலாளர்கள் தங்கள் கடமையை நிறைவேற்றுவதற்காக பொது நிகழ்வுகளை பதிவு செய்யும் போது, அவர்களுக்கு எதிராக வன்முறையை பயன்படுத்துவது அநாகரிகமானது மட்டுமல்ல, சட்டத்திற்கு புறம்பான, கீழ்த்தரமான செயலாகும். இந்த சம்பவம், பாஜவினரின் அடாவடித்தனத்தையும், சகிப்புத்தன்மையின்மையையும் வெளிப்படுத்துகிறது.

இத்தகைய தாக்குதல்கள் ஊடக சுதந்திரத்தை அச்சுறுத்துகிறது. ஊடகவியலாளர்களின் பாதுகாப்பையும், அவர்களது உரிமைகளையும் உறுதிப்படுத்துவது அரசின் முக்கிய பொறுப்பாகும். எனவே, இந்த குற்றச் செயலில் ஈடுபட்ட பாஜவினர் மீது காவல் துறை உடனடியாக சட்டப்படியான நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

# சவுக்கு சங்கர் வீடு சூறையாடப்பட்ட விவகாரம்: வழக்கு சிபிசிஐடிக்கு மாற்றம்

சென்னை மார்ச்.26

பிரபல யூடியூபர் சவுக்கு சங்கருக்கு சென்னையில் வீடு உள்ளது. இவர் தனது யூடியூப் பக்கத்தில் அரசியல் விமர்சன வீடியோக்களை வெளியிட்டு வருகிறார். முன்னதாக சர்ச்சைக்குரிய வகையில் பேசியதாக சவுக்கு சங்கர்மீதுகுற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்ட நிலையில், இவருக்கு எதிராக சில வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. இதனால் சவுக்கு சங்கரை போலீசார் சிறையில் அடைத்தனர். இதைத் தொடர்ந்து, ஜாமீன் பெற்று சவுக்கு சங்கர் வெளியே வந்தார். எனினும், தொடர்ச்சியாக யூடியூபில் சவுக்கு சங்கர் வீடியோக்களை வெளியிட்டு வருகிறார்.

இந்நிலையில், தூய்மைப் பணியாளர்கள் குறித்து அவதூறாக பேசியதாகக் கூறி சவுக்கு சங்கர் வீட்டின் மீது காலை தாக்குதல் நடத்தப் பட்டது.

அவரது வீட்டின் பின்பக்க கதவை உடைத்த மர்மநபர்கள் சிலர், தூய்மைப் பணியாளரை அவதூறாகப் பேசியதாக கண்டனம் தெரிவித்து கழிவு நீர் போன்றவற்றை வீடு முழுவதும் ஊற்றியதாகச் சொல்லப்படுகிறது. அவரது வீட்டையும் சூறையாடியதால் பரபரப்பு ஏற்பட்டது. சவுக்கு சங்கரின் வீடு சூறையாடப்பட்டதற்கு பலரும் கண்டனம் தெரிவித்து வருகின்றனர்.

இந்நிலையில் சவுக்கு சங்கர் வீட்டில் கழிவுநீர் ஊற்றிய விவகாரத்தில் பதிவான விசாரணையை, சிபிசிஐடிக்கு மாற்றி காவல் துறைதலைமைஇயக்குநர் உத்தரவிட்டுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. முன்னதாக இந்த சம்பவம் தொடர்பாக சவுக்கு சங்கரின் தாயார் கமலா கீழ்ப்பாக்கம் காவல் நிலையத்தில் புகார் அளித்திருந்தார்.

இதனிடையே சவுக்கு சங்கர், காவல் ஆணையரகத்தை குற்றம்சாட்டியிருந்த நிலையில், வழக்கு சிபிசிஐடிக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# இலங்கை சிறைகளில் தவிக்கும் மீனவர்களை சந்திக்க 5 பேர் கொண்ட குழு பயணம்

ராமேசுவரம், மார்ச்.26

ராமேசுவரம் உள்ளிட்ட தமிழக பகுதிகளில் இருந்து மீன்பிடிக்க செல்லும்மீனவர்கள்தொடர்ந்து இலங்கை கடற்படையால் தாக்கப்படுவதும் படகுகளுடன் சிறைபிடிக்கப்படுவதும் அடிக்கடி நடக்கின்றன. சிறையில் அடைக்கப்படும் மீனவர்கள் அந்நாட்டு கோர்ட்டில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் விடுவிக்கப்படாமல், பல லட்சம் வரை அபராதம் விதித்து மீண்டும் சிறையில் அடைக்கப்படுகின்றனர். எனவே பல மீனவர்கள் இலங்கை சிறைகளில் உள்ளனர். அவர்களை சந்திப்பதற்காக ராமேசுவரத்தில் இருந்து விசைப்படகு மீனவர் சங்க ஒருங்கிணைப்பாளர் சேசுராஜா தலைமையில் 5 பேர் கொண்ட குழுவினர் இலங்கை செல்ல உள்ளனர். அதற்காக மண்டபத்தில் இருந்து நேற்று இரவு ரெயிலில் புறப்பட்டனர். இந்த 5 மீனவர்களும் இன்று (செவ்வாய்க்கிழமை) பிற்பகல் 2 மணி அளவில் திருச்சியில் இருந்து கொழும்புவுக்கு விமானத்தில் செல்கின்றனர். பறிமுதல் செய்த படகுகளை பார்வையிட்டு, மீனவர்கள் பிரச்சினைக்கு தீர்வு காண இலங்கை மீன்வளத்துறை மந்திரியிடம் கோரிக்கை வைக்க உள்ளதாகவும், 6 நாட்கள் இலங்கையிலேயேதங்கிஇருந்து ஏப்ரல் 1ந்தேதி தமிழகம் வர திட்டமிட்டு உள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

# தமிழக கேந்திரிய வித்யாலயா பள்ளிகளில் தமிழ் ஆசிரியர்கள் எண்ணிக்கை 0: கனிமொழி எம்.பி.



சென்னை, மார்ச்.26

தி.மு.க. நாடாளுமன்றக் குழுத் தலைவர் கனிமொழி தனது எக்ஸ் வளத்தில் கூறியிருப்பதாவது:

தமிழ்நாட்டில் உள்ள கேந்திரிய வித்யாலயா பள்ளிகளில் தமிழ் கற்பிக்க நியமிக்கப்பட்டுள்ள நிரந்தர ஆசிரியர்களின் எண்ணிக்கை என்ன என்ற கேள்விக்கு மத்திய அரசு அளித்துள்ள பதில் "0". ஆனால், இந்தி கற்பிக்க 86 ஆசிரியர்களும், சமஸ்கிருதம் கற்பிக்க 65 ஆசிரியர்களும் இருப்பதாகக் கூறுகிறது மத்திய பா.ஜ.க. அரசு.

அரசியலமைப்பு சட்டத்தில் இந்தியோ அல்லது சமஸ்கிருதமோ தேசிய மொழி என்று வரையறுக்கப்பட்டுள்ளதா..? அல்லது பா.ஜ.க. கட்டமைக்க விரும்பும் தேசியம் என்பது அதுதானா..?

கேந்திரிய வித்யாலயா பள்ளிகளின் வழியாக எந்த தாய்மொழியைக் காக்கிறீர்கள் அல்லது கற்றுக்கொடுக்கிறீர்கள்..? மும்மொழிக் கொள்கை என்ற போர்வையில் இப்படி இந்தியையும், சமஸ்கிருதத்தையும் திணிப்பதைத்தான் காலம் காலமாகத் திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்க்கிறது. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மாவட்டவாரியாக மக்கள் பிரச்சினைகள்: விவரங்களை சமர்ப்பிக்குமாறு விஜய் அறிவுறுத்தல்

சென்னை, மார்ச்.26




தமிழக வெற்றிக்கழகத்தின் 2ம் ஆண்டு தொடக்க விழா சமீபத்தில் மாமல்லபுரத்தில் நடந்தது. இந்த விழாவுடன் சேர்த்து பொதுக்குழு கூட்டத்தை கூட்ட திட்டமிடப்பட்டு இருந்தது. ஆனால் நிர்வாகிகள் நியமனம் தாமதம் தொடர்பாக பொதுக்குழு கூட்ட தேதி தள்ளிப்போனது. கட்சியில் 120 மாவட்ட செயலாளர்கள் நியமிக்க திட்டமிடப்பட்டு, தற்போது வரை 114 மாவட்ட செயலாளர்கள்நியமிக்கப்பட்டு இருக்கிறார்கள். இது தவிர மாநில நிர்வாகிகள் அறிவிக்கப்பட்டுள்ளனர்.

இந்தநிலையில், கட்சியின் முதல் பொதுக்குழு கூட்டம் சென்னை திருவான்மியூரில் வருகிற 28 ந்தேதி நடக்கிறது. இந்த பொதுக்குழு கூட்டத்தில் புதிய நிர்வாகிகள் நியமனத்திற்கு ஒப்புதல் பெறப்படுகிறது. கட்சியின் சட்ட திட்ட விதிகள் அறிவிக்கப்பட்டு,

அதற்கு ஒப்புதல் அளிக்கப்பட உள்ளது. கட்சியின் செயல்பாடு, கூட்டணி நிலைப்பாடு குறித்து நிர்வாகிகளிடம் விஜய் கருத்து கேட்க இருக்கிறார். இந்த கூட்டத்தில் செயற்குழு, பொதுக் குழு, மாநில, மாவட்ட நிர்வாகிகள் என 2,500 பேர் பங்கேற்க இருக்கிறார்கள். கூட்டத்தில் முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட இருக்கிறது. .

இந்நிலையில் மாவட்ட வாரியாக ஒவ்வொரு பகுதிகளில் என்னென்ன திட்டங்கள் செயல்படுத்தப்படாமல் உள்ளது, அப்பகுதி மக்களின் குறைகள் உள்ளிட்டவற்றை அறிக்கையாக மாவட்ட நிர்வாகிகள் தயாரித்து, வரும் பொதுக் குழு கூட்டத்தில் சமர்பிக்க வேண்டும் என த.வெ.க. தலைவர் விஜய் அறிவுறுத்தி உள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளது.

இதனிடையே. விஜய் பொதுமக்களை நேரில் சந்திப்பது இல்லை என விமர்சனங்கள் எழுந்துள்ளநிலையில், தொகுதி வாரியாக சுற்றுப்பயணம் மேற்கொள்ளவும் திட்டமிட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. சுற்றுப்பயணம் மேற்கொள்ளும் போது, நிர்வாகிகளிடம் பெற்ற அறிக்கைகளை மக்கள் முன் பேச உள்ளதாக கூறப்படுகிறது. இதன் மூலம் ஆளும் கட்சியான தி.மு.க.வுக்கு நெருக்கடியை ஏற்படுத்த விஜய் திட்டமிட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளது.

# திருத்துறைப்பூண்டி: ஆகாச மாரியம்மன் ஆலயத்தில் தீமிதி திருவிழா

திருவாரூர் மார்ச்.26

திருவாரூர் மாவட்டம் திருத்துறைப்பூண்டி அருகே உள்ள ஆதிரங்கம் குடிச்சேத்தி பகுதியில் உள்ள பழமையான ஆலயம் ஆகாச மாரியம்மன் ஆலயம். இந்த ஆலயத்தில்ஆண்டுதோறும்பங்குனிதிருவிழாவிமரிசையாக நடைபெறும். அவ்வகையில் இந்த வருடம் கடந்த ஒரு வாரத்திற்கு முன்னால் காப்பு கட்டுதலுடன் பங்குனி திருவிழா தொடங்கியது. திருவிழாவில் தினசரி சுவாமி வீதி உலாநடைபெற்றது.திருவிழாவின்முக்கியநிகழ்ச்சியான தீமிதி திருவிழா நேற்று நடைபெற்றது. விழாவை முன்னிட்டு காலையிலிருந்து சுவாமிக்கு அபிஷேக ஆராதனையும் தீப ஆராதனையும் நடைபெற்றது. 3000 மேற்பட்ட பக்தர்களுக்கு அதனை தொடர்ந்து மாலை அருள்மிகு அரங்கநாத பெருமாள் ஆலயத்தில் இருந்து செடல் காவடி, அலகு காவடி மற்றும் பால்குடங்களுடன் பக்தர்கள் ஊர்வலமாக புறப்பட்டு ஆகாச மாரியம்மன் ஆலயத்தில் எதிரே அமைக்கப்பட்டுள்ள பிரம்மாண்ட தீக்குளியில் இறங்கி நேர்த்திக்கடனை செலுத்தினர். விழாவில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு அம்மனை தரிசனம் செய்தனர். விழா ஏற்பாடுகளைவிழாகுழுவினர்மற்றும்ஆதிரங்கம்கிராமவாசிகள் செய்திருந்தனர்.

# டிராக்டர்பள்ளி வேன் மோதல் எல்கேஜி மாணவன், பெண் பலி: மேலும் 4 குழந்தைகள் படுகாயம்



கிருஷ்ணகிரி, மார்ச்.26

கிருஷ்ணகிரியில் இருந்து திருவண்ணாமலை செல்லும் சாலையில் தனியார் மெட்ரிக் பள்ளி செயல்பட்டு வருகிறது. இங்கு நர்சரி படிக்கும் 9 சிறார்களை நேற்று மாலை 3.30 மணியளவில் பள்ளி வேன் ஏற்றிக்கொண்டு புறப்பட்டது. சந்துரு (22) என்பவர் வேனை ஓட்டிச் சென்றார். மாலை 4 மணியளவில் கிருஷ்ணகிரி சென்னை சாலையில் வி.ஐ.பி., நகர் அருகில் சென்றபோது, முன்னால் எம்.சாண்ட் லோடு ஏற்றி சென்ற டிராக்டர் திடீரென நின்றுள்ளது. இதனால், கட்டுப்பாட்டை இழந்த பள்ளி வேன் டிராக்டர் மீது பயங்கரமாக மோதியது. இதில், குழந்தைகள் அனைவரும் இடிபாடுகளுக்குள் சிக்கி கதறித்துடித்தனர். அருகிலிருந்தவர்கள், அவர்களை மீட்டனர்.

தகவலறிந்த கிருஷ்ணகிரி டவுன் போலீசார் படுகாயமடைந்த குழந்தைகள் அனைவரையும் கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். ஆனால், வழியிலேயே எல்.கே.ஜி., மாணவனான போகனப்பள்ளியைச் சேர்ந்த செல்லதுரை மகன் ஹர்னிஷ்(4) உயிரிழந்தான். அதேபோல், டிராக்டரில் சென்ற பெரிய மோட்டூரைச் சேர்ந்த கூலித்தொழிலாளி விஜயா(45) சம்பவ இடத்திலேயே இறந்தார். மேலும், 4 குழந்தைகளும் படுகாயமடைந்தனர். வேன் டிரைவர் சந்துரு, மற்றும் 4 குழந்தைகள் லேசான காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

# கடற்கரையில் கரை ஒதுங்கிய மிதவை



புவனகிரி, மார்ச்.26

கடலூர் மாவட்டம் புவனகிரி அடுத்த பரங்கிப்பேட்டை, சாமியார் பேட்டை கடற்கரைக்கும், வேலங்கிராயன்பேட்டை கடற்கரைக்கும் இடையே மிதவை ஒன்று நேற்று காலை கரை ஒதுங்கியது. தகவலறிந்து புதுச்சத்திரம் போலீசார் அங்கு சென்று பார்த்தபோது, மஞ்சள் நிறத்தில் மாலத்தீவு என எழுதப்பட்ட மிகப்பெரிய மிதவை கரை ஒதுங்கி இருந்தது தெரியவந்தது. உடனடியாக வருவாய் துறையினருக்கும், மீன்வளத்துறை அதிகாரிகளுக்கும் தகவல் தெரிவிக்கப் பட்டது. அவர்கள் விரைந்து வந்து இந்த மிதவை குறித்து விசாரணை நடத்தினர். கரை ஒதுங்கிய மிதவை, கப்பலில் பயன்படுத்தப்படும் போயா என்று அழைக்கப்படும் மிதவை என முதல் கட்ட விசாரணையில் தெரியவந்தது. காற்றின் வேகம் மற்றும் அலை காரணமாக இந்தமிதவைகரைஒதுங்கி இருக்கலாம் என்று கூறப்படுகிறது.

# கண்டலேறு அணையில் இருந்து தமிழகத்திற்கு 500 கன அடி தண்ணீர் திறப்பு



சென்னை, மார்ச்.26

கண்டலேறு அணையில் இருந்து தமிழகத்திற்கு தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளது. சென்னை மக்களின் குடிநீர் தேவைக்காக, ஆந்திரா தமிழக நதிநீர் ஒப்பந்தப்படி ஆண்டுதோறும் ஆந்திர அரசு தமிழகத்திற்கு ஜூலை முதல் அக்டோபர்வரை8டிஎம்சியும், ஜனவரி முதல் ஏப்ரல் வரை 4 டிஎம்சியும், 3 டிஎம்சி சேதாரம் என மொத்தம் 15 டிஎம்சி தண்ணீர் வழங்க வேண்டும். கண்டலேறு அணையில் தெலுங்குகங்காஒப்பந்தப்படி, 8 டிஎம்சிக்கு மேல் தண்ணீர் இருந்தால் தமிழகத்திற்கு தண்ணீர் திறந்து விடலாம்.

இந்நிலையில் ஆந்திர அரசின்நீர்வளத்துறைஅதிகாரிகள், கடந்த ஜனவரி மாதம் திறக்க வேண்டிய தண்ணீரை தமிழகத்திற்கு திறக்காததால், தமிழக அரசின் நீர்வளத்துறை அதிகாரிகள் ஆந்திர பொதுப்பணித்துறை அதிகாரிகளுக்கு தமிழகத்திற்கு தண்ணீர் திறக்க வேண்டும் என கடிதம் எழுதினர்.

இதனையடுத்து, தமிழக அதிகாரிகளின் கோரிக்கையை ஏற்று, நேற்று காலை 11.45 மணிக்கு வினாடிக்கு 500 கன அடி தண்ணீர் திறக்கப்பட்டது. மேலும், இந்த தண்ணீர் படிப்படியாக கூடுதலாக திறக்கப்படும் என அதிகாரிகள் தெரிவித்தனர். ஏப்ரல் மாதம் திறப்பதாக இருந்த கிருஷ்ணா தண்ணீர் மார்ச் மாதமே திறந்துவிட்டது குறிப்பிடத்தக்கது.

# வக்பு மசோதாவை திரும்ப பெற கோரி சென்னையில் நாளை ஆர்ப்பாட்டம்: தவ்ஹீத் ஜமாஅத் அறிவிப்பு

சென்னை, மார்ச்.26

தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாஅத் மாநில செயலாளர் என்.அல் அமீன் நேற்று வெளியிட்ட அறிக்கை: வக்பு வாரிய திருத்த மசோதா எனும் பெயரில் ஆளும் ஒன்றிய பாஜ அரசு இஸ்லாமியர்களின் வழிபாடு மற்றும் தர்மத்திற்கு பயன்படும் சொத்துக்களை பறிப்பதற்கு திட்டம்தீட்டி, நடப்பு நாடாளுமன்ற கூட்டத்தொடரில் அதை சட்டமாக்க உள்ளது. இதை கண்டித்தும், அம்மசோதாவை திரும்ப பெற வலியுறுத்தியும் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நாளை மறுநாள் (27ம் தேதி) மாலை 4.30 மணியளவில் சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகே நடைபெற உள்ளது. இதில் மாநிலப் பொதுச்செயலாளர் ஏ. முஜிபுர் ரஹ்மான் கண்டன உரையாற்ற உள்ளார். இதில் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொள்ள உள்ளனர். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# துப்பாக்கியால் சுட்டு பிடிக்கப்பட்ட ரவுடி பாம் சரவணனுக்கு தனியார் மருத்துவமனையில் சிகிச்சை கோரிய மனு தள்ளுபடி



சென்னை, மார்ச்.26

போலீசாரால் சுட்டு பிடிக்கப்பட்ட தனது கணவர் பாம் சரவணனுக்கு தனியார் மருத்துவமனையில் சிகிச்சை அளிக்க உத்தரவிடக் கோரி அவரது மனைவி மகாலட்சுமி சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்துள்ளார். மனுவில், காயம் முழுமையாக குணமடையாததால் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை அளிக்க அனுமதியளித்து உத்தரவிட வேண்டும் என்று கோரியிருந்தார். இந்த மனு நீதிபதிகள் எம்.எஸ்.ரமேஷ், என். செந்தில் குமார் அமர்வில் நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்தது.

அப்போது, கூடுதல் குற்றவியல் வழக்கறிஞர் ஆர். முனியப்பராஜ் ஆஜராகி, இதே கோரிக்கையுடன் ஏற்கனவே மனுத்தாக்கல் செய்யப்பட்டு வழக்கு விசாரணையின்போது சரவணனுக்கு உரிய சிகிச்சை அளிக்கப்பட்டதாக அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டதால் அந்த மனு முடித்து வைக்கப்பட்டது. தண்டனை கைதிகளுக்கு சிகிச்சை அளிக்கும் வசதி ஸ்டான்லி மருத்துவமனையில் உள்ளதால் தனியார் மருத்துவமனையில் சிகிச்சைஅளிக்க முடியாது எனக் கூறினார். இதனை ஏற்றுக்கொண்ட நீதிபதிகள், மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட்டனர்.

# தமிழ்நாடு முழுவதும் 40 இடங்களில் சுங்கச்சாவடி கட்டணம் ரூ.25 வரை உயர்வு: ஏப்ரல் 1ம் தேதி அமல்




சென்னை, மார்ச்.26

தமிழ்நாடு முழுவதும் 40 இடங்களில் சுங்கச்சாவடி கட்டணம் ரூ.5 முதல் ரூ.25 வரை உயருகிறது.

இந்த கட்டண உயர்வு ஏப்ரல் 1ம் தேதி அமலுக்கு வரவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளது. தேசிய நெடுஞ்சாலைகள் ஆணையத்தின் கீழ் தமிழகத்தில் மொத்தம் 78 சுங்கச்சாவடிகள் செயல்பாட்டில்உள்ளன. இந்நிலையில் சென்னையில் உள்ள சுங்கச்சாவடிகள் உட்பட தமிழகம் முழுவதும் 40 சுங்கச்சாவடிகளில் வரும் ஏப்ரல் 1ம் தேதி முதல் கட்டணம் உயர்கிறது. ஒவ்வொரு வகையான வாகனங்களுக்கு ஏற்ப ரூ.5 முதல் ரூ.25 வரை கட்டணம் உயர்த்தப்படுகிறது.

அதன்படி சென்னையில் உள்ள வானகரம், சூரப்பட்டு, சென்னை கொல்கத்தா நெடுஞ்சாலையில் உள்ள நல்லூர் சுங்கச்சாவடி, தாம்பரம் திண்டிவனம் நெடுஞ்சாலையில் உள்ள ஆத்தூர் சுங்கச்சாவடி, பரனூர் சுங்கச்சாவடி உள்பட 40 சுங்கச்சாவடிகளில் வரும் ஏப்ரல் 1ம் தேதி முதல் கட்டண உயர்வு அமலுக்கு வருகிறது. மீதமுள்ள சுங்கச்சாவடிகளில் செப்டம்பர் 1ம் தேதி முதல் கட்டணம் உயருகிறது. இதனால் விலைவாசி உயர்வு அதிகரிக்கவாய்ப்புள்ளது என்று வியாபாரிகள் தெரிவித்தனர்.

தினகனி


Namadhu dhina kani daily morning newspaper
Press register general of India
PRGI NO TNTAM/2023/88253

26.3.2025

# தென்காசி காசி விஸ்வநாதர் கோவிலில் ஏப்.7ல் மகா கும்பாபிஷேகம்

தென்காசி, மார்ச்.26

கடந்த15ம்நூற்றாண்டில் தென்காசி பகுதியை ஆண்ட பராக்கிரமபாண்டிய மன்னரால் வடக்கே கங்கை கரையில் அமைந்துள்ள காசிவிசுவநாதர் தெற்கில் உள்ளவர்களும் தரிசிக்கும் வண்ணம் தென்காசி சிற்றாற்றின் கரையில் காசி விஸ்வநாதர் கோவில் கட்டப்பட்டது. இக்கோவில் திருப்பணிகள் நடைபெற்று 19 ஆண்டுகள் ஆகிவிட்ட நிலையில் மீண்டும் திருப்பணிகள் செய்து கும்பாபிஷேகம் நடத்த வேண்டும் என்று பக்தர்கள் கோரிக்கை விடுத்தனர்.



இதனை ஏற்று இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபு, தென்காசி காசி விஸ்வநாதர் கோவிலில் கும்பாபிஷேகம் நடத்த உத்தரவிட்டார். இதனையடுத்து சுமார் 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மகா மண்டபம், பிரகார மண்டபம், கொடிமரம், மாடமதில், ராஜகோபுரம், விமான கோபுரங்கள், சுதை வேலை, பஞ்சவர்ணம் பூசுதல், ஸ்தூபி ஸ்தாபனம், தீர்த்தக்குளம் என பல்வேறு திருப்பணிகள் புனரமைக்கப்பெற்று ஏப்ரல் மாதம் 7ம் தேதி மகா கும்பாபிஷேகம் நடக்கிறது. கும்பாபிஷேக விழாவையொட்டி ஏப்ரல் 3ம் தேதி யாகசாலை பூஜை தொடங்குகிறது. கும்பாபிஷேக விழாவில் லட்சக்கணக்கான பக்தர்கள் பங்கேற்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. பக்தர்களின் வசதிக்காக விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட உள்ளன.

# ஏப்ரல் 1ந் தேதி முதல் கட்டிட திட்ட அனுமதி விண்ணப்பங்களுக்கு புதிய நடைமுறை

சென்னை, மார்ச்.26

பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

பெருநகர சென்னை மாநகராட்சியில் 01.04.2025 முதல் சமர்ப்பிக்கப்படும் கட்டிட திட்ட அனுமதி விண்ணப்பங்கள் onlineppa.tn.gov.in என்ற தமிழ்நாடு ஒற்றைசாளரபோர்ட்டல் இணையதளம் மூலம் சமர்ப்பிக்குமாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சியில் திட்ட அனுமதி விண்ணப்பங்கள்கட்டடத்திட்ட ஒப்புதல்நிகழ்நிலைஅமைப்பின் (Online Building Plan Approval System) மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. திட்ட அனுமதி விண்ணப்பங்கள் நிகழ்நிலை முறையில் பெற்று செயலாக்கப் பட்டு ஒப்புதல் வழங்கப் பட்டு வருகின்றது.

மேலும், பொதுமக்களுக்காகஇந்தசேவையை மேம்படுத்த வேண்டி இந்த கட்டடத்திட்ட ஒப்புதல் நிகழ்நிலை தமிழ் நாடு ஒற்றைசாளர போர்ட்டலில் ஒருங்கிணைக்கப்படுகின்றது.

01.04.2025 முதல் பெருநகரசென்னை மாநகராட்சியில் சமர்ப்பிக்கப் படும்கட்டிடதிட்டஅனுமதி விண்ணப்பங்களை onlineppa.tn.gov.in என்ற தமிழ்நாடு ஒற்றை சாளர போர்ட்டல் (Tamil Nadu Single Window Portal for Planning Permission) இணைய தளம் மூலம் தான் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

மேலும், 31.03.2025 மற்றும் அதற்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்கள் அனைத்தும் ஏற்கனவே நடைமுறையில் உள்ள முறையிலேயே ஒப்புதல் வழங்கப்படும்.

எனவே, பொதுமக்கள் பெருநகர சென்னை மாநகராட்சியில் 01.04.2025 முதல் சமர்ப்பிக்கப்படும் கட்டிட திட்ட அனுமதி விண்ணப்பங்களை onlineppa.tn.gov.in என்ற தமிழ்நாடு ஒற்றை சாளர போர்ட்டல் (Tamil Nadu Single Window Portal for Planning Permission) இணைய தளம் மூலம் சமர்ப்பிக்குமாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கணக்க விநாயகர் ஆலயத்தில் மண்டல அபிஷேக பூஜை நிறைவு விழா

அரியலூர் மார்ச்.26

கங்கைகொண்ட சோழபுரம் கணக்க விநாயகர் ஆலய மகா கும்பாபிஷேக விழா கடந்த பிப்ரவரி மாதம் 2ம் தேதி நடைபெற்றது. கும்பாபிஷேகம் முடிந்ததும், 48 நாள் மண்டல பூஜை நடத்துவது வழக்கம். அவ்வகையில் தொடர்ந்து மண்டல பூஜை நடைபெற்று வந்தது. விழாவின் நிறைவாக 48ம் நாள் மண்டல பூஜை நேற்று நடைபெற்றது. மண்டல அபிஷேகத்தை முன்னிட்டு கணபதி ஹோமம், சிறப்பு அபிஷேகம், மகா தீபாராதனை நடைபெற்று அன்னதானம் நடைபெற்றது.



மாளிகைமேடு, உட்கோட்டை, கங்கை கொண்ட சோழபுரம், குருவாலப்பர் கோவில், சம்போடை, பாகல்மேடு, சின்ன வளையம், புதுச்சாவடி, கடாரங்கொண்டான் உள்ளிட்ட பல்வேறு கிராமங்களை சேர்ந்த பக்தர்கள் பூஜையில் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர்.

விழாவில் இந்து சமய அறநிலைத்துறை பிரகதீஸ்வரர் கோவில் செயல் அலுவலர் செந்தமிழ்ச் செல்வி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# மதுரை மாநகர் வர்த்தக தொழில் மைய வளாகத்தில் தமிழ்நாடு கல்ச்சுரல் அகாடமி டிரஸ்ட் மற்றும் நட்சத்திர நண்பர்கள் அறக்கட்டளை 2025 ம் ஆண்டின் மகளிர் திருவிழா

மதுரை மாநகர் வர்த்தக தொழில் மைய வளாகத்தில் தமிழ்நாடு கல்ச்சுரல் அகாடமி டிரஸ்ட் மற்றும் நட்சத்திர நண்பர்கள் அறக்கட்டளை 2025 ம் ஆண்டின் மகளிர் திருவிழா நடைபெற்றது. நாள்தோறும் ஆயிரம் நபர்களுக்கு அன்னமிட்டகை அன்னதான பிரபு குருசாமி அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் குருசாமி அவர்களுக்குமகளிர்தினவிழாவில் மனிதநேய செம்மல் விருது கல்ச்சுரல் அகாடமி டிரஸ்ட் நிறுவனரும் தலைவியும் ஆன விஜய பாரதி அவர்கள் வழங்கினார்



மேலும் சிறப்பு விருந்தினராக மதுரை மாவட்டம் மற்றும் அமர்வு நீதிபதி ஜெயக்குமாரி ஜெமி ரத்னா, காவல் துணைக் கண்காணிப்பாளர் பொருளாதார குற்றப்பிரிவு திருச்சி லில்லி கிரேஸ் மதுரை மாவட்ட சமூக நல அலுவலர் திலகம் ஆகியோர் கலந்து கொண்டு விழாவினை சிறப்பித்தனர் இந்திய வழக்கறிஞர்கள் துணை ஆட்சியர் செய்யது முகம்மது, கேட்வே ஹவுசிங் (பி) லிமிடெட் முருகன், லெட்சுமணா மல்டி பெஷாலிட்டி மருத்துவ மனை நிர்வாக இயக்குநர் சாந்தி, பொன்னி மருத்துவ மனை யாழினி செல்வராஜ். RSMP பாரம்பரிய சித்த வைத்திய மகாசங்கம் மாநில தலைவர் நாகலிங்கம் Asia Foundation சரவணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர் குற்றபிரிவு காவல் ஆய்வாளர் வசந்தா. சங்க செயலாளர் சாமிதுரை அவர்கள், ஸ்ரீ மதனகோபாலசாமி கோவில் அறங்காவலர் குழு Ex தலைவர் பாலதம்புராஜ் தமிழ்நாடு வணிகள் சங்கங்களின் பேரவை மதுரை மாவட்ட தலைவர் ராஜ பாண்டியன் வாழ்த்துரை வழங்கினார்கள் இவ் விழாவில் கலந்து கொண்ட . அனைவரையும் தமிழ் நாடு கல்ச்சுரல் அகாடமி டிரஸ்ட் மற்றும் அக்னி சிறகுகள் பவுண்டேசன் தலைவி செயலாளர், நிறுவனர் டாக்டர் விஜய பாரதி அவர்கள் வரவேற்புரையாற்றினார் இந்நிகழ்ச்சியில் 2025 ஆண்டின் சிங்க பெண் விருது களாக காவல் துறை, சிறந்த நல்லாசிரியர், மாமன்ற உறுப்பினர் தேசிய பழுதூக்கும் வீராங்கனை மருத்துவ சேவை தோல் மருத்துவம் சிறந்த கட்டிட கலை தொழில் அதிபர்கள் பெண்கள் சமூக நல அமைப்பு. சமூக சேவை, பரதநாட்டியம் கலை, பெண் யூடி பர், தன்னம்பிக்கை நாயகி கிராமிய சிலம்பாட்ட கலை இலவசம் சிலம்பம் கை தொழில் முனைவர் பாடல் ஆசிரியர் மற்றும் ஆர்கெஸ்ட்ரா போன்ற தொழிலுக்கான சாதனை புரிந்தவர்களுக்கு விருதுகள் வழங்கபட்டு கௌரவிக்கப்பட்டது மேலும் சிறுமிகள் கலை நிகழ்ச்சி, நடனம், கராத்தே போட்டிகள் நடைபெற்றது . தமிழ்நாடு கல்ச்சுரல் அகாடமிடிரஸட்இராமஜெயந்தி சண்முகம் அவர்கள் நன்றியுரையாற்றினார்

# சென்னை விமான நிலைய விரிவாக்கம்: மார்ச் 2026 க்குள் நிறைவடையும் மத்திய மந்திரி தகவல்

புதுடெல்லி, மார்ச்.26

சென்னை சர்வதேச விமான நிலையத்தின் இரண்டாம் கட்ட விரிவாக்கம் மற்றும் நவீனமயமாக்கல் பணிகள் மார்ச் 2026க்குள் நிறைவடையும் என்று மத்திய சிவில் விமானப் போக்குவரத்துத் துறை இணை மந்திரி முரளிதர் மொஹூல் தெரிவித்தார்.

சென்னை சர்வதேச விமான நிலையத்தின் இரண்டாம் கட்ட விரிவாக்கத்தின் நிலை குறித்து தமிழக நாடாளுமன்ற உறுப்பினர்வைகோஎழுப்பிய கேள்விக்கு மாநிலங்களவையில் அவர்பதிலளித்தார்.

இதுதொடர்பாகஎழுத்து மூலம் அவர் அளித்த பதிலில், "2,467 கோடி ரூபாய் செலவில் சென்னை சர்வதேச விமான நிலைய விரிவாக்கம் மற்றும் நவீனமயமாக்கல் பணிகளை இந்திய விமான நிலையங்கள் ஆணையம் இரண்டு கட்டங்களாக மேற்கொண்டுள்ளது. முதல் கட்டத்தின் கீழ், ஒரு புதிய ஒருங்கிணைந்த முனைய கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. இது விமான நிலையத்தின் பயணிகள் கையாளும் திறனை ஆண்டுக்கு 23 மில்லியன் பயணிகளிலிருந்து 30 மில்லியனாக உயர்த்தி உள்ளது. இந்த முனையம் 08.07.2023 முதல் செயல்பட்டு வருகிறது. இரண்டாம் கட்டம் 3வது முனையத்தின் வளர்ச்சியை உள்ளடக்கியது, விமானநிலையத்தின் திறனை ஆண்டுக்கு 35 மில்லியன் பயணிகளாக மேலும் இது மேம்படுத்துகிறது. இந்த கட்ட பணிகளைமார்ச்2026ல்முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# "அகத்தியா" படத்தின் ஓடிடி ரிலீஸ் தேதி அறிவிப்பு




'ஆசை ஆசையாய்' படத்தின் மூலம் தமிழ் சினிமாவில் அறிமுகமானவர் நடிகர் ஜீவா. இவர் 'சிவா மனசுல சக்தி, கற்றது தமிழ், கொரில்லா, ரவுத்திரம், கலகலப்பு 2 போன்ற படங்களில் நடித்து தனக்கென ரசிகர்களை உருவாக்கி வைத்துள்ளார். கடைசியாக இவர் பிளாக் படத்தில் நடித்திருந்தார். இப்படம் நல்ல வரவேற்பை பெற்றது.

இப்படத்தையடுத்து ஜீவா, பா.விஜய் இயக்கத்தில் 'அகத்தியா' என்ற படத்தில் நடித்துள்ளார். இதில் அர்ஜுன், ராஷி கன்னா, யோகி பாபு, விடிவி கணேஷ் மற்றும் ரெடின் கிங்ஸ்லி உள்ளிட்டோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். வேல்ஸ் நிறுவனம் தயாரிக்கும் இப்படத்திற்கு யுவன் ஷங்கர் ராஜா இசையமைத்துள்ளார். இப்படம் 1940 காலகட்டத்திலும், தற்போது நடப்பது போலவும் எடுக்கப்பட்டிருந்தது. 'அகத்தியா' திரைப்படம் உலகளவில் ரூ. 4 கோடி வசூல் செய்துள்ளதாக தகவல் வெளியானது.

இந்நிலையில் திரைப்படத்தின் ஓடிடி வெளியீட்டை படக்குழு வெளியிட்டுள்ளது. திரைப்படம் வரும் மார்ச் 28 ம் தேதி சன் நெக்ஸ்ட் ஓடிடி தளத்தில் வெளியாகவுள்ளது.

# ஓ.டி.டி.யில் வெளியாகும் 'முபாசா : தி லயன் கிங்'



1994 மற்றும் 2019ம் ஆண்டில் 'தி லயன் கிங்' என்ற பெயரில் காட்டுக்கே ராஜாவான சிங்கத்தை வைத்து 2 படங்கள் வெளியாகின. இந்த லயன் கிங் படத்திற்கு ஒரு தனி ரசிகர் பட்டாளமே உள்ளது. காட்டு விலங்களுக்கு இடையே உள்ள பொறாமை, வஞ்சம், சூழ்ச்சி, போராட்டம், பந்தம், காதல், தலைமை என அனைத்து குணாதிசயங்களை காட்டி இருப்பது இப்படத்திற்கு கூடுதல் அம்சமாகும்.

இந்நிலையில், பேரி ஜென்கின்ஸ் இயக்கத்தில் பிரம்மாண்டமான பொருட்செலவில் எடுக்கப்பட்ட படம் முபாசா: தி லயன் கிங். இந்த படம் சூழ்ச்சியால் கொலை செய்யப்படும் சிம்பாவின் தந்தை முபாசா கடந்து வந்த பாதையை வைத்து உருவாகியுள்ளது. அரச குடும்பத்தை சாராது, அனாதையாக வளர்ந்து தனக்கான ஆட்சியை உருவாக்கும் முபாசாவின் கதை மெய்சிலிர்க்க வைக்கிறது. இப்படம் உலக அளவில் ரூ.3,500 கோடி வசூல் செய்துள்ளது.

இந்த நிலையில் தற்போது இப்படத்தின் ஓ.டி.டி ரிலீஸ் குறித்த அறிவிப்பு வெளியாகி உள்ளது. அதன்படி, இப்படம் வருகிற 26ந் தேதி ஜியோ ஹாட்ஸ்டார் ஓ.டி.டி தளத்தில் தமிழ், ஆங்கிலம், இந்தி, தெலுங்கு ஆகிய மொழிகளில் வெளியாக உள்ளது.

# மம்முட்டியின் 'பசூக்கா' பட டிரெய்லர் அப்டேட்

மலையாள சினிமாவின் முன்னணி நட்சத்திர நடிகர்களுள் ஒருவர் மம்முட்டி. 'விசா' திரைப்படத்தின் மூலம் மலையாளசினிமாவில்கதாநாயகனாகஅறிமுகமானார். 'மவுனம்சம்மதம்'படத்தின்மூலம்தமிழ்சினிமாவிற்கு அறிமுகமானார். மேலும், சமீபத்தில் இவரது நடிப்பில் வெளியான 'டோமினிக் அண்ட் தி லேடீஸ் பர்ஸ்' திரைப்படம், ரசிகர்கள் மத்தியில் கலவையான விமர்சனங்களை பெற்றது.

இந்த நிலையில், புதுமுக இயக்குனரான டீனோ டென்னிஸ் இயக்கியுள்ள பசூக்கா என்ற படத்தில் மம்முட்டி ராணுவ அதிகாரியாக நடித்துள்ளார். இந்த படத்தில் காயத்ரி ஐயர் மற்றும் கவுதம் வாசுதேவ் மேனன் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளனர். இந்த படத்திற்கு இசையமைப்பாளர் மிதுன் முகந்தன் இசையமைத்துள்ளார். மேலும், நிமிஷ் ரவி மற்றும் ராபி வர்கீஸ் ஒளிப்பதிவு செய்துள்ளனர்.

சமீபத்தில் இந்த படத்தின் டீசர் வெளியாகி ரசிகர்கள் மத்தியில் கவனத்தை பெற்றது. அதனை தொடர்ந்து இப்படம் வருகிற ஏப்ரல் 10ந் தேதி வெளியாக உள்ளது. இந்த நிலையில் தற்போது இப்படத்தின் டிரெய்லர் குறித்த அறிவிப்பு வெளியாகி உள்ளது. அதன்படி, வருகிற 26ந் தேதி மாலை 08.10 மணியளவில் யூடியூப் தளத்தில் வெளியாக உள்ளது. அதற்கு முன்னதாக மாலை 08.00 மணிக்கு திருசூர் ராகம் தியேட்டரில் வெளியாக உள்ளது. இது குறித்த பதிவை மம்முட்டி வெளியிட்டுள்ளார்.

# "வீர தீர சூரன்" படத்தின் "அய்லா அலேலா" பாடல் புரோமோ வெளியீடு

தமிழ் சினிமாவின் முன்னணி நடிகரான விக்ரம் தனது 62வது படமான 'வீர தீர சூரன் 2' படத்தில் நடித்து முடித்துள்ளார். இப்படத்தை சித்தா பட இயக்குனர் அருண்குமார் இயக்கியுள்ளார். எச்.ஆர்.பிக்சர்ஸ் சார்பில் ரியாஷிபுதயாரித்துள்ள இப்படத்தில் எஸ்.ஜே.சூர்யா, சுராஜ் வெஞ்சராமுடு, துஷரா விஜயன், சித்திக் ஆகியோர் நடித்துள்ளனர். இந்த படத்தில் நடிகர் விக்ரம் கிராமிய தோற்றத்தில் 'காளி' என்ற கேங்ஸ்டர் கதாபாத்திரத்தில் நடித்துள்ளார். ஜிவி பிரகாஷ் இசையமைத்துள்ள இப்படம் வருகிற 27ந் தேதி வெளியாக உள்ளது. சமீபத்தில் இப்படத்தின் இரண்டு பாடல்கள் வெளியாகி நல்ல வரவேற்பை பெற்றன. அடுத்த பாடல் குறித்த அறிவிப்பை படக்குழு வெளியிட்டுள்ளது. இந்நிலையில் 'அய்லா அலேலா' பாடலின் புரோமோவை படக்குழு வெளியிட்டுள்ளது.

# 2026 உலகக்கோப்பை கால்பந்து : நியூசிலாந்து அணி தகுதி



23வது உலகக்கோப்பை கால்பந்து தொடர் கனடா, மெக்சிகோ, அமெரிக்காவில் அடுத்த ஆண்டு (2026ம் ஆண்டு) நடைபெற உள்ளது.மொத்தம் 48 அணிகள் பங்கேற்கும் இந்த தொடரில் போட்டியை நடத்தும் 3 நாடுகள் தவிர மற்ற அணிகள் தகுதி சுற்று மூலமே தேர்வு செய்யப்படும். இதர்கான தகுதி சுற்று ஆட்டங்கள் கண்டங்கள் வாரியாக நடைபெற்று வருகின்றன.

இதில் ஓசியானா கூட்டமைப்பு அணிகளுக்கான தகுதி சுற்றின் 3வது ரவுண்டின் இறுதி ஆட்டத்தில் நியூசிலாந்துநியூ கலிடோனியா அணிகள் மோதின. இந்த ஆட்டத்தில் நியூசிலாந்து அணி 3-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றதுடன் உலகக்கோப்பைக்கும் தகுதி பெற்று அசத்தியது.

தோல்வியடைந்த நியூ கலிடோனியா அணிக்கு மற்றுமொரு வாய்ப்புள்ளது. ஆசியா, ஆப்பிரிக்கா, வடக்கு, மத்தியஅமெரிக்காமற்றும்தென்அமெரிக்ககூட்டமைப்புகளைசேர்ந்த6அணிகள்பங்கேற்கும்கண்டங்களுக்கு இடையேயான பிளே ஆப் சுற்றில் வெற்றி பெற்றால் நியூ கலிடோனியா உலகக்கோப்பைக்கு தகுதி பெறும்.

# தேசிய மகளிர் ஆக்கி: 5வது நாள் முடிவுகள்




தேசிய மகளிர் ஆக்கி தொடர் ராஞ்சியில் நடைபெற்று வருகிறது. இதில் ஒடிசா, மராட்டியம், மத்திய பிரதேசம், மணிப்பூர், அரியானா, மிசோரம், ஜார்கண்ட் மற்றும் பெங்கால் ஆகிய 8 அணிகள் கலந்து கொண்டுள்ளன.

இதில் 5வது நாளான நேற்று நடைபெற்ற ஒரு லீக் ஆட்டத்தில் ஜார்கண்ட் அணி 8-0 என்ற கோல் கணக்கில் மணிப்பூரை பந்தாடியது. மற்ற ஆட்டங்களில் அரியானாவை வீழ்த்தி ஒடிசாவும் (2-0), மத்திய பிரதேசத்தை வீழ்த்தி மிசோரமமும் (2-1), பெங்காலை வீழ்த்தி மராட்டியமும் (4-2) வெற்றி பெற்றன.

# ஐ.பி.எல்.: அவர்களுக்கு எதிராக பந்து வீச எனக்கு பயம் கம்மின்ஸ்



நடப்பு ஐ.பி.எல். தொடரின் 2வது லீக் ஆட்டத்தில் முன்னாள் சாம்பியன்களான சன் ரைசர்ஸ் ஐதராபாத்ராஜஸ்தான் ராயல்ஸ் அணிகள் மோதின. இதில் டாஸ் வென்ற ராஜஸ்தான் பந்துவீச்சை தேர்வு செய்தது. அதன்படி முதலில் பேட்டிங் செய்த ஐதராபாத் அணி 20 ஓவர்களில் 6 விக்கெட்டுக்கு 286 ரன்கள் குவித்தது. அதிகபட்சமாக இஷான் கிஷன் 106 ரன்கள் அடித்தார். ராஜஸ்தான் தரப்பில் துஷார் தேஷ்பாண்டே 3 விக்கெட்டுகள் கைப்பற்றினார்.

பின்னர் 287 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற கடினமான இலக்குடன் ஆடிய ராஜஸ்தான் அணி 20 ஓவர்களில் 6 விக்கெட்டுக்கு 242 ரன்கள் மட்டுமே எடுத்தது. இதனால் ஐதராபாத் அணி 44 ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. அதிகபட்சமாக துருவ் ஜூரெல் 70 ரன்கள் அடித்தார். ஐதராபாத் தரப்பில் ஹர்ஷல் பட்டேல், சிமர்ஜீத் சிங் தலா 2 விக்கெட்டுகள் வீழ்த்தினர்.

இந்நிலையில் இந்த போட்டியில் வெற்றி பெற்ற பின் சன்ரைசர்ஸ் ஐதராபாத் அணியின் கேப்டன் பேட் கம்மின்ஸ் அளித்த பேட்டியில், "எங்களுடைய பேட்ஸ்மேன்களுக்கு எதிராக பந்து வீச எனக்கு விருப்பமில்லை. அவர்களது ஆட்டம் நம்ப முடியாத வகையில் உள்ளது. அது பயத்தை ஏற்படுத்துகிறது. இந்த ஆட்டம் எதிரணி பவுலர்களுக்கு கடினமாக இருக்கும். இவ்வளவு பெரிய ரன்கள் குவிப்பது அணிக்கு வெற்றியைத் தேடி தரும். அதே சமயம் நீங்களும் எதிரணிக்கு நிறைய ரன்களை வாரி வழங்குவீர்கள். எங்களது முக்கிய வீரர்களை மீண்டும் தக்க வைக்க முடிந்ததில் மகிழ்ச்சி. சிலரை தவற விட்டாலும் அவர்களுக்கு பதிலாக வந்த வீரர்கள் சிறப்பானவர்களாக உள்ளனர். எடுத்துக்காட்டாக இஷான் கிஷன் அற்புதமாக விளையாடினார். நாங்கள் சுதந்திரமாக விளையாட முயற்சிக்கிறோம். எங்களது பயிற்சியாளர்கள் 34 வாரங்களாகவே இத்தொடருக்காக தயாராகி வந்தனர். எங்கள் வீரர்களுக்கு நாங்கள் சுதந்திரமாக விளையாடும் ஆதரவைக் கொடுக்கிறோம். அது சொல்வதை விட செய்வது கடினம். ஆனால் எங்களுடைய வீரர்கள் இந்த வருடம் முழுவதும் எப்படி விளையாட வேண்டும் என்பதற்கான புளூ பிரிண்டை உருவாக்கியுள்ளோம்" என்று கூறினார்.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.